# திருவண்ணாமலை மாவட்ட முதன்மைக்கல்வி அலுவலரின் செயல்முறைகள்

முன்னிலை– திரு.இல.நடராஜன் , எம்.எஸ்சி.,எம்.பில்.,எம்எட்.,

ஓ.மு.எண்– 6139/அ1/2019 நாள் .10.2019

பொருள் தமிழ்நாடு அமைச்சுப்பணி – திருவண்ணாமலை, முதன்மைக் கல்வி அலுவலகம் – இளநிலை உதவியாளர் திரு.ரா.சக்திவேல் – என்பாருக்கு இளநிலை உதவியாளர் பணியிடத்தில் 17.11.2017 முற்பகல் பணிவரன்முறை செய்து ஆணையிடப்படுகிறது.

பார்வை 1.அரசாணை எண்191/பொதுத் துறை நாள்01.2.1962
2.அரசு கடிதம் எண் 6483/73–3 பொது நாள் 30.07.1983
3.தமிழ்நாடு அரசு பணியாளர் தேர்வாணையக்குழு துணை செயலாளரின் கடிதம் எண் 5426/PSD-H2/2017 நாள் 23.09.2017
4.திருவண்ணாமலை, மாவட்டக் கல்வி அலுவலரின் செயல்முறைகள் ந.க.எண்–7052/அ1/2017 நாள் 13.11.2017
5.திரு.ரா.சக்திவேல், இளநிலை உதவியாளர், முதன்மைக் கல்வி அலுவலகம்,திருவண்ணாமலை என்பார் விண்ணப்பம் நாள் 10.2019

************

திருவண்ணாமலை, முதன்மைக் கல்வி அலுவலகத்தில் இளநிலை உதவியாளராக பணிபுரியும் திரு.ரா.சக்திவேல் என்பாருக்கு பார்வை (3) ல் காணும் தமிழ்நாடு அரசு பணியாளர் தேர்வாணைக்குழு துணை செயலர் அவர்களின் செயல்முறைகளின்படி இளநிலை உதவியாளர் பணிக்கு தெரிவு செய்யப்பட்டு பார்வை (4) ல் காணும் திருவண்ணாமலை, மாவட்டக் கல்வி அலுவவரின் செயல்முறைகளின்படி இளநிலை உதவியாளராக நியமனம் அளிக்கப்பட்டு 17.11.2017 முற்பகல் முதல் தொடர்ந்து பணிபுரிந்து வருவதை தொடர்ந்து இளநிலை உதவியாளர் பணியிடத்தில் பணிவரன் முறை செய்து ஆணை வேண்டி கருத்துருவினை பார்வை (5) ல் காணும் கடிதத்தின் பணியாளர் விண்ணப்பித்துள்ளார்.

பார்வை (1) மற்றும் (2) ல் காணும் அரசாணை மற்றும் அரசு கடிதங்களின்படியும் , பார்வை(5)ல் காணும் சம்மந்தப்பட்ட கோரிக்கையின் அடிப்படையிலும் தமிழ்நாடு அமைச்சுப் பணியின் கீழ்வரும் இளநிலை உதவியாளர் பதவியில் 17.11.2017முற்பகல் முதல் பணிவரன்முறை செய்து ஆணை வழங்கப்படுகிறது.

பணிவரன்முறைப்படுத்தப்பட்ட தேதியிலிருந்து தொடர் மூன்றாண்டு பணிக்காலத்தில் இரண்டு ஆண்டு தகுதிகாண் பருவத்தை நிறைவு செய்யவேண்டுமென்று ஆணையிடப்படுகிறது.

மேற்காண் பொருள் சார்ந்து அன்னாரின் பணிப்பதிவேட்டில் தக்க பதிவுகள் மேற்கொள்ளப்பட்டது என தெரிவிக்கப்படுகிறது.

முதன்மைக் கல்வி அலுவலர்,
திருவண்ணாமலை.

பெறுநர் ,

திரு.ரா.சக்திவேல்,
இளநிலை உதவியாளர்,
முதன்மைக் கல்வி அலுவலகம்,
திருவண்ணாமலை.